*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*05 02 2026 THURSDAY  12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், மக்களவையில் இன்று நிறைவேறியது.
2. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகள் ஏற்படையதல்ல என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குறை கூறியுள்ளார்.
3. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கான வழிகாட்டியாக பட்ஜெட் உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
4. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச உச்சிமாநாடு இந்தியாவின் தலைமையில் நடைபெறுவது பெருமைக்குரியது என்று ஐ.நா கூறியுள்ளது.
5. Zagreb ஓப்பன் மல்யுத்தப் போட்டியில் இந்தியா, ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் இன்று நிறைவேறியது.

இன்று காலை அவை கூடியதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

அப்போது பேசிய பேரவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகள், அவையின் மாண்புகளை குலைக்கும் வகையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் இதுபோன்ற செயல்பாடுகள் ஏற்புடையதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

அவையில், ஆளும் கட்சி உறுப்பினர்களை நோக்கி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செல்வது தவறானது என்றும் திரு. ஓம் பிர்லா கூறினார்.

இதனைத் தொடர்ந்து அவை நடவடிக்கைகள் நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அவை கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

அப்போது கூச்சல் குழப்பத்திற்கு இடையே, குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், அவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்படுவதாக திரு. ஓம். பிர்லா அறிவித்தார்.

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, பிரதமர் திரு. நரேந்திரமோடி மாநிலங்களவையில் இன்று பதில் அளிக்கவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரின் உரையை கேட்க விரும்புவதாக தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சிக்கு இதில் விருப்பமில்லை என்றால், அது அவர்களது தனிப்பட்ட விவகாரம் என்று அமைச்சர் கூறினார்.

இதர உறுப்பினர்கள் பிரதமரின் உரையை கேட்பதை தடுப்பது ஏற்புடையதல்ல என்று அவர் தெரிவித்தார்.

எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க பிரதமர் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற ஒத்துழைக்காமல் அமளியில் ஈடுபடுவது தவறானது என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, அவை நடத்தை நெறிமுறைகளுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கான வழிகாட்டியாக பட்ஜெட் உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழுக்கு தாம் அளித்துள்ள நேர்காணலை பகிர்ந்துள்ளார்.

மாநில அரசுகள், நிதியை முறையாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் அதில் வலியுறுத்தியுள்ளார்.

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு மக்களிடையே பணப்புழக்கத்தை அதிகரித்துள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சியில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜித்தன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

தேசிய சிறுதொழில் கழகத்தின் நிறுவன தினத்தை ஒட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சியில் இந்த நிறுவனம் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிறுவனத்தின் திட்டங்கள் குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஜித்தன்ராம் மாஞ்சி வலியுறுத்தினார்.

>>>>><<<<<

வட மாநில தொழிலாளர்களுக்கு எதிராக, திமுகவைச் சேர்ந்த மாநில அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்த கருத்துக்கள் கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரிவினை அரசியலுக்கு திமுக முக்கியத்துவம் அளித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியைப் பொறுத்தவரை, அனைவருக்குமான வளர்ச்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வருவதாக திரு. சிராக் பஸ்வான் தெரிவித்தார்.

மத்திய அமைச்சர்கள் திரு. ராம்தாஸ் அத்வாலே, திரு. கிரிராஜ் சிங் உட்பட பலரும் திமுக அமைச்சரின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

மேற்குவங்க அரசு ஊழியர்களின் அகவிலைப்படி நிலுவையை, அம்மாநில அரசு வழங்க வேண்டும் என்று உச்சநீதின்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. சஞ்சய் கரோல், திரு. பிரசாந்த் குமார் மிஸ்ரா அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

2008ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுவரையிலான நிலுவைத் தொகையில் 25 சதவீதம், அடுத்த மாதம் 6ஆம் தேதிக்குள் விடுவிக்கப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

புத்தரின் அமைதி மற்றும் நல்லிணக்கம், மனிதகுலத்திற்கு தொடர்ந்து வழிகாட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் தமிழில் இக்கருத்தை பதிவு செய்துள்ள பிரதமர், கொழும்பில் உள்ள புனித கங்காராமை கோவிலில், புனித தேவ்னிமோரியின் சின்னங்களை பொதுமக்களின் தரிசனத்திற்காக அந்நாட்டு அதிபர் திரு. அனுரகுமார திசநாயக தொடங்கி வைத்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், தமது இலங்கை பயணத்தின் போது இந்த சின்னங்களை இலங்கைக்கு அனுப்புவது குறித்து தீரமானிக்கப்பட்டதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளும் நாகரிகம் மற்றும் ஆன்மிக பிணைப்பை கொண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தெலங்கானாவில் ஆளும் காங்கிரஸ் அரசு, தெலுங்கு கலாச்சாரம் மற்றும் சனாதன தர்மத்திற்கு எதிராக செயல்படுவதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று மெஹபூப் நகரில் பிஜேபி சார்பில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

வாக்கு வங்கி அரசியலுக்கு மட்டுமே காங்கிரஸ் அரசு முக்கியத்துவம் அளிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

*தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை காங்கிரஸ் அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு. நிதின் நபின் குறை கூறினார்.*

*>>>>><<<<<*

*சத்திஷ்கடில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் நக்ஸலைட்டு ஒருவர் இன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.*

*பிஜப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது, இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*அப்பகுதியிலிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.*

*>>>>><<<<<*

*செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச உச்சிமாநாடு இந்தியாவின் தலைமையில் நடைபெறுவது பெருமைக்குரியது என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்டரஸ் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இந்த கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த மாநாட்டில் தாம் பங்கேற்கவுள்ளதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*இந்தியாவுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த விரும்புவதாக அமெரிக்கா கூறியுள்ளது.*

*சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. Sergio Gor, இருநாடுளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் உயர்மட்ட அளவில் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டினார்.*

*இது, இருநாடுகளுக்கு இடையேயான உறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்ல உதவும் என்றும் திரு. Sergio Gor தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*அமெரிக்காவுடனான அணுசக்தி பேச்சுக்கள், ஓமனில் நாளை தொடங்கவுள்ளதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. Abbas Araghchi அறிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், துருக்கியில் நடைபெறுவதாக இருந்த பேச்சுக்கள், தற்போது ஓமனுக்கு மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்தப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமையும் என்று ஐ.நா நம்பிக்கை தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*Zagreb ஒப்பன் மல்யுத்தப் போட்டியில் இந்தியா, ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் Sujeet Kalkal தங்கப்பதக்கத்தையும், 61 கிலோ எடைப்பிரிவில் Aman Sehrawat*

***வெள்ளிப்பதக்கத்தையும், 70 கிலோ எடைப்பிரிவில் Abhimanyou Mandwal வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.***

***>>>>><<<<<***

***ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.***

***புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் பிரிவில், Jonathan Gavin Antony தங்கப்பதக்கம் வென்றார்.***

***10 மீட்டர் கலப்பு குழுப் பிரிவில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.***

***>>>>><<<<<***

***சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவு இரண்டாவது ஆட்டத்தில் தாய்லாந்துக்கு எதிராக இந்தியா 2-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.***

***>>>>><<<<<***

***அஜர்பைஜான் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Niranjan Nandakumar – Rishika Uthayasuriyan இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.***

***கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 23-21, 21-18 என்ற செட்கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்டின் Taabia Khan - Dhiren Ayyappan இணையை வென்றது.***

***>>>>>END<<<<<***